புதியதொரு வரலாற்றைத் தொடங்கி வைத்த பொன்மகனே ! வாழ்க ! வாழ்க !

உதயமெனும் இளைஞர்தம் இதய மன்னன் !
உணர்வெலாம் தமிழர்நலம் நாடும் செல்வன் !
முதியவரும் தேடுகின்ற கட்டி வெல்லம் !
முன்னேற்றக் கழகத்தின் முத்துச் செல்வம் !
எதிரிகளை அதிரவைத்த இளைய சூரன்
எந்நாளும் ஏடுகளின் செய்தி வேந்தன் !
புதியதோர் வரலாற்றுப் பொன்னன் ! அன்னோன்
புத்துலகின் புதியசிற்பி வாழ்க ! வாழ்க !

இந்தியத்து வரலாறு ஏத்திப் போற்றும்
இணையில்லாக் கழகத்தின் எஃகுத் தூணாய்
முந்திவந்து முனைமுகத்தே தாங்கி நிற்கும்
முத்துவேலர் திருப்பேரன் ! மக்கள் நாடும்
விந்தியத்துத் தென்திசையில் விளைந்து நாளும்
வெற்றிகளைக் குவித்துவரும் வீர வீரன்
செந்தமிழன் சிங்கமகன் பிறந்த நாளில்
சேர்ந்திடுவோம் ! வாழ்த்திடுவோம்! வாழ்க! வாழ்க !

கழகத்தின் கொள்கைகள் இளைஞர் நெஞ்சில்
கனலெரியாய்ச் சுடர்விடவே தொகுதி தோறும்
சுழல்கின்ற பம்பரமாய்ச் சுற்றிச் சுற்றி
நடத்தியநின் பாசறைகள் எல்லாம் வீரக்
கழல்களாய் ! கணைகளாய் ! இளைஞர் தம்மைக்
கட்டிஈர்த்த காட்சிகளைக் கண்டதாலே
விழல்களாய் வீழ்ந்துவிட்ட வீணர் கூட்டம்
வெருண்டோடச் செய்தவரே வாழ்க ! வாழ்க !

கழகத்தை என்னூரில் தோற்று வித்து
இளைஞர்களை ஈர்த்திடவே படிப்பகம் கட்டிக்
கழகத்தை வளர்த்தவொரு தூய தொண்டன்
மாங்குடி இரத்தினத்தின் சிலைதி றந்து
கழகத்தின் தொண்டர்க்கும் சிலைநி றுத்தும்
புதியதொரு வரலாற்றைத் தொடங்கி வைத்த

கழகத்தின் கண்மணியே ! வாழ்க ! வாழ்க !
கருணைபொங்கும் பொன்மகனே வாழ்க ! வாழ்க!

எங்கள்ஊர் மாங்குடி ஏற்றம் காண
யான்வேண்ட மறுக்காமல் மனமு வந்து
பொங்குதமிழ் வளர்க்கும் சிங்கம் ! மாண்பார்
பொதுப்பணித் துறையமைச்சர் அண்ணன் வழங்க !
எங்களுடை மாவட்டச் செயலர் அண்ணன்
எஸ்கேகண்ட நூற்றாண்டு நூல கத்தில்
யாம்வைத்த கலைஞர்சிலை திறந்துவைத்த
மாண்புமிகு துணைமுதல்வர்
வாழ்க! வாழ்க!

புலவர்
முத்து. வாவாசி

தேர்தல் நேரத்தில் மட்டும்

வன்னியர்கள் மீது அக்கறை காட்டும் ராமதாஸ்!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் எச்சரிக்கை!

அரியலூர், நவ. 27 -

டாக்டர் ராமதாஸ் நான்கு ஆண்டு காலம் மறந்து விடுவார் தேர்தல் வரும் போது தான் வன்னிய மக்கள் குறித்து அக்கறை வரும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் குற்றம் சாட்டி உள்ளார் .

அரியலூர் மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது .

இதில் கலந்து கொண்ட அமைச்சர் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

விழுப்புரத்தில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் வன்னிய சமூகத்தின் பிரதிநிதியாக முதல் முறையாக உழவர் உழைப்பாளர் கட்சி சார்பாக சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட மறைந்த முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமியின் நினைவிடத்தை திறந்து வைக்கிறார்.

இதனையடுத்து வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டில் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் சுடப்பட்டு கொல்லப்பட்ட வன்னிய சமூகத்தை சேர்ந்த வன்னிய இட ஒதுக்கீடு போராளிகளுக்கு நினைவு மண்டபத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்க இருக்கிறார்.

இது வன்னிய மக்கள் மீது தமிழ்நாடு முதலமைச்சர் காட்டும் மதிப்பை சிறப்பாக எடுத்துக் காட்டும். எனவே அவர் மீது புழுதி வாரி தூற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் டாக்டர் ராமதாஸ் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார் .

அவருக்கு நான்கு ஆண்டு காலம் எப்பொழுதும் போல மறந்து விடுவார் தேர்தல் வரும் போது தான் வன்னிய மக்கள் குறித்து அக்கறை வந்து விடும் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் சட்டமன்ற தேர்தல் அறிவிக்கும் நாளன்று காலையில் 10.5 சதவீத இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டதை வைத்து தேர்தலில் அறுவடை செய்தார்.

அதேபோன்று தற்போதும் அறுவடை செய்யலாம் என துடிக்கிறார் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள் அறிவார்கள் 20 சதவீதத்தின் மூலம் என்ன நடக்கிறது 10.5 வந்தால் என்ன இழப்பு வரும் என்பதை மக்கள் அறிவார்கள் எனவே முதல்வர் மீது புழுதி வாரி தூற்றும் பணியை டாக்டர் ராமதாஸ் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் பேட்டியளித்தார்.

முன்னதாக கூட்டத்தில் அமைச்சர் சிவ.சங்கர் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் உரிமைத் தொகை திட்டம் ஜார்கண்ட், மகாராஷ்டிரா மாநிலங்களில் பின்பற்றி யுள்ளனர்.

அது மக்களிடத்திலே வரவேற்பு பெற்றுள்ளது எனவே ஜார்கண்ட் மகாராஷ்டிரா மாநில சட்டமன்ற தேர்தல் முடிவு காட்டுவதாக அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ராமதாஸ் பேசுகிற பேச்சை விட தமிழ்நாடு முதலமைச்சர் எந்த விதத்திலும் குறைத்து பேசிவிடவில்லை. தவறாக பேசி விடவில்லை. டாக்டர் ராமதாஸ் தான் யாரையும் எடுத்தெறிந்து பேசுவது, ஒருமையில் பேசுவது வழக்கம் அவர் சமீபத்தில் முதல்வரை பற்றி பேசிய பேச்சை கேட்டால் நன்றாக தெரியும்.

அன்புமணிக்கு அமைச்சர் சிவசங்கர் எச்சரிக்கை!

தேர்தலுக்கு ஒரு வருடம் முன்பு மக்களை நோக்கி வருவதற்கு ராமதாஸ் துடித்து கொண்டுள்ளார். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தேர்தல் அறிவிக்கும் அன்று காலையில் 10.5 வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இட ஒதுக்கீடு வழங்கியதற்கான தரவுகள்,ஆதாரங்கள் இல்லாததால் அது செல்லாது என நீதிபதி தெரிவித்து இட ஒதுக்கீட்டை ரத்து செய்தார் .

எனவே டாக்டர் ராமதாஸ் வன்னியர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றால் இவற்றையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு உங்களுடைய டாக்டர் வேலையை பாருங்கள் தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டை பார்த்து பார்த்து செய்து கொடுத்தவர்.

கலைஞர் அவருக்கு தெரியாதது உங்களுக்கு எதுவும் தெரிந்துவிட போவதில்லை.

தற்பொழுது முதல்வர் செய்யும் சாதனைகளை பார்த்து மற்ற மாநிலங்கள் அவற்றை நிறைவேற்றி வருகின்றனர் .

என்ன செய்ய வேண்டும் என்பதை முதல்வர் அறிவார்.

அதை செய்து கொண்டிருக்கிறார் அவரை தரக்குறைவாக விமர்சனம் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் முதல்வர் யார், அவருடைய தரம் என்பதை புரிந்து கொண்டு பேச வேண்டும்

இவர் முதல்வரை பார்த்து மன்னிப்பு கேட்க சொல்கிறார்.

யார் யாரை பார்த்து மன்னிப்பு கேட்க வேண்டும்.

இந்தியாவை ஆட்டி படைக்கின்ற மோடி அமிக்ஷாவை எதிர்த்து கேள்வி கேட்கக் கூடிய ஒரே முதல்வர் திராவிட மாடல் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கொள்கை ரீதியாக சித்தாந்தம் ரீதியாக எதிர்க்கிறோம் என்று துணிச்சலாக நின்று பேசியவர் எங்கள் முதல்வர் .

திராவிடமுன்னேற்ற கழகத்தை எச்சரிக்கைகின்ற வேலை எல்லாம் நீங்கள் வைத்துக் கொள்ள வேண்டாம்.

அன்புமணி இது போன்று பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா முன்னிட்டு

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியத்தில் கழகக் கொடியேற்றி - உணவு - நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

ஒன்றியச் செயலாளர் அ.ம.துரைவீரமணி அறிக்கை!

சென்னை, நவ. 27 -

சென்னை தெற்கு மாவட்டம் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (27.11.2024 - புதன்கிழமை) ஒன்றியத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் பிறந்தநாள் விழா நடைபெற உள்ளது.

வீரா கனிமொழி தலைமையில் கழக கல்வெட்டு கங்கா உணவகம் அருகில் 1000 பேருக்கு பிரியாணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

ஒன்றிய துணைச் செயலாளர் ஏ.எம்.யுவராஜா தலைமையில் வாட்டர் டேங்க் அருகில் 500 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது.

மாவட்ட பிரதிநிதி கே. எஸ்.மாறன்குமார் தலைமையில் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் பிரியாணி வழங்கப்படுகிறது.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா.வினோத் தலைமையில் முரசொலி மாறன் சிலை அருகில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள், அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், ஸ்கூல் பேக் வழங்கப்படுகிறது.

கிளைச் செயலாளர் ஏ.பி. பாபு தலைமையில் தந்தை பெரியார் சிலை அருகில் கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்கி 500 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது.

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை டி.ஐசக்நேசக்குமார் தலைமையில் பேரறிஞர் அண்ணா பசுமை பூங்கா அருகில் 500 ஏழை எளியோருக்கு வேட்டி, சேலை வழங்கி உணவு வழங்கப்படுகிறது.

வானகரம் ஊராட்சியில் அவைத் தலைவர் என்.ஜெயச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி கு.சதீஷ்குமார் ஆகியோர் தலைமையில் ஓடமாநகர் அருகில் 500 பேருக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.பி.அருள் தலைமையில் ஷேக்மானியம் கல்வெட்டு அருகில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உணவு வழங்கப்படுகிறது.

ஒன்றிய பொருளாளர் என்.ரவி தலைமையில் தர்ம ராஜா கோவில் அருகில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உணவு வழங்கப்படுகிறது.

ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் எம்.ஜி.சாமிநாதன் தலைமையில் அம்பேத்கர் சிலை மேட்டுக்குப்பம் அருகில் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் வழங்கப்படுகிறது.

மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் ஏ.எம்.பர்மன் தலைமையில் ஆண்டாள் நகர் கழக கல்வெட்டு அருகில் 700 பேருக்கு பிரியாணி வழங்கப்படுகிறது.

இவ்வாறு ஒன்றிய கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி தெரிவித்துள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

மாதவரம் வடக்குப் பகுதியில் நல உதவிகள்!

புழல் எம். நாராயணன் அறிவிப்பு!

மாதவரம், நவ.27-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக கழக செயல்வீரர்கள் கூட்டத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை எழுச்சியோடு கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக செயல்வீரர்கள் கூட்டம் 19வது வட்டம் மாத்தூர் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. பகுதி அவை தலைவர் வி. திராவிட வீரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு, 19-வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்புரையாற்றினார்.

பிறந்தநாள் விழா கொண்டாடுவது குறித்து வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, கே. கருணாகரன், பி.எஸ். சந்துரு, வி.ஆர். குப்பன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், அ.ஆ. ராஜேந்திரன் எம் சி, கௌரி சங்கர்லால், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி. நிர்மல் குமார், பி. தரணி, கே.செல்வன், ஜிம் கே. ராஜா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா மதிவாணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நவம்பர் 27 அன்று பிறந்தநாள் காணும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டங்கள் தோறும் கழகக் கொடி ஏற்றி இனிப்பு வழங்கி, காலை உணவு, மதிய உணவு, ரத்ததான முகாம், மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம்கள், கபடி போட்டி, கேரம் போட்டி, கால்பந்து போட்டி, பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள், முதியோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களில் நலத்திட்ட உதவிகள், மாட்டுவண்டி ரேக்ளா போட்டி என பலவிதமான போட்டிகள் நடத்தி, ஏழை எளிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த இரு வாரங்களாக நடைபெற்ற வாக்காளர் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாம்களில் சிறப்பாக பணியாற்றிய நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள், பாக உறுப்பினர்களுக்கு இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

இக்கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட அணிகளில் துணை அமைப்பாளர்கள் எஸ். கோபாலகிருஷ்ணன், மாத்தூர் கோபிநாத், எஸ். உதயகுமார், எஸ். கருணாகரன், எஸ். சிவகுமார், கே. சண்முகப்பிரியன்,எச். பீர்முகமது, டி. வினோத், டி. அமிர்தராஜ், கொசப்பூர் வெங்கடேசன், இ. எம், மனோகரன்,துரை தசரதன், அமுதா ,ஆர். சுதா, எஸ். சுதா, கலைச்செல்வி, எம். என். அஜய் தென்னவன், இரா. குகன், சசிதரன், வக்கீல் சண்முகம்,சங்கர்லால், சுரேந்தர்,

15வது வட்ட நிர்வாகிகள் ரவிச்சந்திரன், கண்ணன், ராஜேந்திரன், எல்லமுத்து, பாஸ்கர், தெய்வயானை, பாலன், தசரதன், தனசேகர், தினேஷ், தேவராஜ், முருகன், கதிர்வேல், புஷ்பராஜ், விவேக் ,

16 வது வட்ட நிர்வாகிகள் வக்கீல் வெங்கடேசன், முத்தையா, பரசுராமன் ,தரணி, ராஜி, டோமினிக், பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், கடப்பாக்கம் மகேஷ்குமார், சாம்ராஜ், ரிஷி குமார், கிருபாகரன், நைனியப்பன், பார்த்திபன், விஷால், சிவராமன், சேகர், வேலு ,

17 வது வட்டம் சி. மூர்த்தி, சி.பாலாஜி, என்.நாகராஜன், டி. திவாகர், எம். ஜான்சன், இ. சுதர்சன், பூபாலன், எம். மைக்கேல், பி. செந்தில், இ. கார்த்திக் வக்கீல் எம் .என். தளபதி

19வது வட்டம் துளசி, சையத் அப்சல், மதிவாணன், கங்காதரன், தமிழரசன், சுமன், பிரவீன் குமார், அண்ணாதுரை, சசிதரன், சுரேஷ், ஜானகிராமன், சாந்தகுமார், ராஜேஷ் கண்ணன், நெடுஞ்செழியன், சிவராமன், சிவப்பிரகாசம், ஐசிஎப் விஜயகுமார், வினோத், கலைச்செல்வி, சுகாசினி, தேவி, பெரியநாயகி, எஸ்தர் ராணி, சரண்யா, தீபிகா, சுந்தரி ,

23வது வட்ட நிர்வாகிகள் எழில்குமார், விக்னேஸ்வரன், சரவணன், சிவக்குமார், ராஜாராம், உதயகுமார், ராஜா மோகன்

23 அ வட்ட நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசேன் மொய்தீன், சுதாகர், அறிவழகன், முத்துகிருஷ்ணன், பார்பன், அப்துல் சமது ,ஹரி, பார்த்திபன், வாசுதேவன், லாரன்ஸ், ஜவகர், ராஜேஷ், சாமிநாதன், தனசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாதவரம் வடக்கு பகுதி கழகத்தின் சார்பில் அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது. இறுதியாக துணை செயலாளர் ஆ. ராஜேந்திரன் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மணப்பாறை இரா. வீராசாமி
நவம்பர் 27 (2010)

மணப்பாறை நகரத்திற்குட்பட்ட வட்டக் கிளைக் கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1986ல் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மும்முனைப் போராட்டத்திலும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை வடகிழக்கு மாவட்டம்

புழல் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடகிழக்கு மாவட்டம், புழல் ஒன்றியச் செயலாளர் பெ.சரவணன் அவர்கள், சரிவர கழகப் பணியாற்றாத கார ணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **சி.அற்புதராஜ்**, எம்.ஏ., பி.எல்., (288, பள்ளி தெரு, வடகரை, சென்னை 600 052) அவர்கள் புழல் ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

விழுப்புரம் தெற்குமாவட்டம் - முகையூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் திருமதி பிரேமா (எ) லூர்துமேரி அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக, தான் வகித்த வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக திரு. **எஸ்.லூயிஸ்** (ரயில்வே புது நகர், முகையூர் 605 755, விழுப்புரம் மாவட்டம்) அவர்கள் முகையூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கரூர் வாசுகி முருகேசன்
நவம்பர் 27 (2009)

கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.

கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.

1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

"பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய் ? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.